**பொதுக்காலத்தின் இருபத்தோராம் ஞாயிறு**

**திருவழிபாடு ஆண்டு - A**

**2023-08-27**

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 22: 19-23 ,

*திருப்பாடல்* 138: 1-2a. 2bc-3. 6,8bc,

*திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 11: 33-36,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 16: 13-20)

*திருப்பலி முன்னுரை*

*பொறுப்புக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்தோராம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன் போடு வரவேற்கிறோம். கடவுளின் விருப்பத்தை உணர்ந்து செயல்படவும், அவர் வழங்கியுள்ள பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவர்களாய் திகழவும் இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. "மானிட மகன் யாரென்று நீங்கள் சொல்கிறீர்கள்?" என்ற இயேசுவின் கேள்விக்கு சரியாக பதிலளித்த சீமோன் பேதுரு, திருச்சபையின் பாறையாக மாறுவதை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கிறது. விண்ணரசின் திறவுகோல்களை பேதுருவிடம் வழங்குவதாக ஆண்டவர் இயேசு வாக்களிக்கிறார். விண்ணுலகு மற்றும் மண்ணுலகின் மீது பேதுரு அதிகாரம் பெறுவதையும் காண்கிறோம். 'இயேசுவே வாழும் கடவுளின் மகன்' என்று அறிக்கையிட நாம் தயாராக இருக்கும்போது, ஆண்டவர் நமக்கு மேலான பொறுப்புகளைத் தருவார். நமது வாழ்க்கை கடமைகளை முழுமனதுடன் நிறைவேற்றி, ஆண்டவரின் அருளைக் கண்டுணர வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அனைத்துலக அரசரே இறைவா,*

*திருச்சபையின் மீதும் உலகின் மீதும் நீர் வழங்கியுள்ள அதிகாரத்தை, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உறுதியான மனநிலையோடு கையாள உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*அதிகாரம் வழங்குபவரே இறைவா,*

*உலக நாடுகளின் ஆட்சியாளர்களும், சமூகத் தலைவர்களும் மக்களிடையே ஒற்று மையை வளர்க்கவும், பொருளாதார, அருளாதார நலன்களைக் கொணரவும் ஆர்வத்துடன் உழைக்க உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*ஆறுதல் தருபவரே இறைவா,*

*உலகெங்கும் துன்புறும் கிறிஸ்தவர்கள் பாதுகாப்பு பெறவும், நற்செய்தியின் பரவலை எதிர்ப்போர் அனைவரும் மனந்திரும்பி அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் கை விடவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*குழந்தைகள் விண்ணரசின் சொந்தங்கள் என்று மொழிந்த எம் இறைவா,*

*எம் குழந்தைகள், இளமையில் அதிகமாக உம்மைத் தேடவும்., உம் வர்த்தைகளை வாழ்வாக்கி, தம் சொல்லாலும் திருஅவைக்கும், மனிதகுலச் சமுதாயத்திற்கும். சான்றுப் பகரும் வாழ்வு வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*ஆற்றல் மிகு தந்தையே இறைவா!*

*எம் இளையோர் அனைவரும் உம் தெய்வீக அன்பினால் ஆட்கொள்ளப்பட்டு உலகத்தின் பிழையான ஈர்ப்பினாலே தடம் புரண்டு செல்லாது நல்வாழ்வு வாழ்ந்து வளர அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!*

*மணிப்பூர் மாநிலத்தில் உம் மகன்மீது நம்பிக்கைக்கொண்டோரின் மீது நடத்தப்படும் வன்முறையிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் காத்தருளும். அந்த வன்முறையாளர்கள் தங்கள் தவறுகளைக் கைவிட்டு மனிதநேயத்துடன் நடந்துகொள்ள அவர்களுக்கு நல்மனதினைத் தாரும். அரசியல்வாதிகள் சுயநலத்தைக் களைந்து விட்டு அனைவரையும் சமசாக நடத்த தேவையான மாற்றங்களைச் செய்யத் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*பலனளிக்கச் செய்பவரே இறைவா,*

*போர், வன்முறை, பயங்கரவாதம் போன்றவற்றில் ஆர்வம் காட்டும் தீயோரிடையே உமது அன்பின் வார்த்தையை விதைத்து, இந்த உலகம் அமைதியின் கனியை அறுவடை செய்ய துணைபுரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*